**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**C.C.No.12 /2024**

**வழக்கு சாட்சி PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **செல்வக்குமரன்** | தொழில் | : மருத்துவர் |
| தகப்பனார் பெயர் | : முத்து | கணவர் பெயர் | : ----- |
| கிராமம் | : தர்மபுரி | இனம் | : ஆண் |
| தாலுகா | : தர்மபுரி | வயது | : 31/2025 |
| மாவட்டம் | : தர்மபுரி | நாள் | : 21.07.2025 |

**( எதிரி ஆஜரில் உள்ளார்)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் அரசு மருத்துவமனையில் மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த ஜீலை 2021 முதல் அக்டோபர் மாதம் 2023 வரை நான் பண்ணைக்காடு அரசு மருத்துவமனையில் அரசு மருத்துவராக பணிபுரிந்து வந்தேன் . கடந்த 07.07.2023 ம் தேதியன்று மாலை 05.30 மணியளவில் மருத்துவர் ஆனந்தபசவன் மற்றும் செவிலியர்கள் தமிழரசி , ஜெயராணி ஆகிய மூன்று நபர்களும் பண்ணைக்காடு அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது பண்ணைக்காட்டு பகுதியைச்சேர்ந்த ஆஜர் எதிரியான கோபிஸ்வரன் என்பவர் பண்ணைக்காடு அரசு மருத்துவமனை உள்நோயாளி பிரிவில் அத்துமீறி உள்ளே நுழைந்து அங்கு பணியில் இருந்த மருத்துவர் ஆனந்தபசவன் என்பவரிடம் மருத்துவ சிகிச்சைக்கு உட்பட்ட நோயாளிகளின் மருத்துவ சிகிச்சை ஆவணம் மற்றும் தொடர்புடைய ஆவணங்களை எதிரி கேட்டுள்ளார் . அதற்கு மருத்துவர் ஆனந்தபசவன் நோயாளிகளின் சிசிக்சை

விபரங்களை சம்பந்தம் இல்லாத தனிநபர்களுக்கு வழங்க இயலாது என கூறியபோது எதிரி மருத்துவர் ஆனந்தபசவனைப்பார்த்து பிச்சைக்கார நாயே , உன்னிடம் எத்தனை முறை தகவலை கேட்பது , எல்லாரும் பொய்யாக வேலை செய்கிறீர்களா , உங்களை பார்க்கும் இடத்தில் பார்த்துகொள்கிறேன் என்று சொல்லி கத்தி அரசு மருத்துவர் மற்றும் செவிலியர்களை பணி செய்யவிடாமல் தடுத்து உள்ளார் . அப்போது அங்கு சிகிச்சையில் இருந்த நோயாளிகளையும் அவரது கைபேசியைக்கொண்டு புகைப்படம் எடுத்துக்கொண்டார் . மேற்சொன்ன விபரங்களை மருத்துவர் ஆனந்தபசவன் எனக்கு தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்தார் . அந்த சமயத்தில் நான் மருத்துவமனையில் இல்லை , வெளியே இருந்தேன். பிறகு மறுநாள் புறநோயாளிகள் பிரிவு பணியினை நிறைவு செய்துவிட்டு, மதியம் 01.00 மணியளவில் தாண்டிக்குடி காவல்நிலையம் சென்று நடந்த சம்பவத்தைக்கூறி புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அந்த புகாரின்பேரில் முதலில் C.S.R பதிந்து கொடுத்தார்கள். பிறகு நான்கு நாட்கள் கழித்து போலீசார் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தனர் . நான் கொடுத்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நடந்ததாக சொல்லப்படும் சம்பவ விபரங்கள் நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான் . தொலைபேசி வாயிலாக தகவல் சொல்லி நான் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான் . நான் போலீசாரிடம் கொடுத்த புகாரில் எதிரி எந்த எந்த தேதிகளில் , எந்த எந்த நேரங்களில் வந்து தகவல் கேட்டு தொந்தரவு செய்தார் என்ற விபரத்தினை குறிப்பிட்டு நான் சொல்லவில்லை என்றால் சரிதான் . எதிரி எந்தவிதமான தகவலும் கேட்டு தொந்தரவு செய்யவில்லை என்றாலும் , அதனால்தான் அந்த விபரங்களை என்னால் புகாரில் குறிப்பிட முடியவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகாரில் 12.07.2023 அன்றுதான் புகார் கொடுக்கப்பட்டுள்ளதாக உள்ளது என்றால்

சரிதான். புகார் கொடுக்க ஏற்ப்பட்ட காலதாமதத்திற்கான காரணத்தை புகாரில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. உள்நோயாளிகள் என்றால் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை எடுத்துக்கொள்பவர்கள் , புறநோயாளிகள் என்றால் தங்காமல் சிகிச்சை பெற்றவுடன் சென்றுவிடுவார்கள் என்றால் சரிதான். தினமும் மருத்துவமனைக்கு வரும் உள்நோயாளிகள் , புறநோயாளிகள் விபரங்களை குறிப்பெடுத்து வைத்துக்கொள்வோம் என்றால் சரிதான் . மேற்சொன்ன விபரங்களை மருத்துவமனையில் உள்ள தகவல் பலகையில் குறிப்பிடுவோம் என்றால் சரிதான். போலீசார் விசாரணைக்கு வந்த சமயத்தில் உள்நோயாளிகள் , புறநோயாளிகள் விபரங்களை கண்டறிந்து அதன் விபரங்களை கேட்டு தெரிந்து கொண்டார்களா என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது . போலீசார் என்னை மருத்துவமனையில் வைத்து 08.07.2023 ம் தேதிக்கு பிறகு என்னை விசாரணை செய்தார்கள் , விசாரணை செய்த தேதி குறிப்பிட்டு எனக்கு நினைவில்லை . சம்பவ காலகட்டத்தில் மருத்துவமனையில் CCTV கேமரா நிறுவப்பட்டது என்றால் சரிதான் . CCTV கேமரா பதிவுகளை போலீசார் வசம் விசாரணையின்போது ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்தேன். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் யார் , யார் உள்நோயாளி பிரிவில் இருந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் , ஆனால் அந்த விபரங்களை மருத்துவ பதிவேடு ஆவணங்களை பார்த்தால்தான் தற்போது சொல்லமுடியும். உள்நோயாளிகள் சிகிச்சை பிரிவில் இருந்த நோயாளிகளுக்கு சம்பவம் தொடர்பாக தொந்தரவு எதுவும் ஏற்ப்பட்டதா என்று விசாரித்து கொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். எந்த எந்த நோயாளிகளுக்கு தொந்தரவு ஏற்ப்பட்டது என்று நோயாளிகளின் பெயர் விபரம் தற்போது எனக்கு நினைவில்லை . நான் சொன்னதுபோன்று சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் , எந்த ஒரு நோயாளியும் மேற்சொன்னதுபோன்று நான் விசாரிக்கவில்லை என்றாலும் என் சக மருத்துவர் கேட்டுக்கொண்டதன்பேரில் நான் பொய்யாக புகார் கொடுத்து , அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. இந்த சம்பவ புகார் காலகட்டத்திற்கு பிறகு பண்ணைக்காடு பொதுமக்கள் திண்டுக்கலில் உள்ள JDHS (இணை இயக்குநர் நலப்பணிகள் ) என் மீதும் , மருத்துவர் ஆனந்தபவசன் மீதும் புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான் . அதன்பேரில் ஏற்ப்பட்ட விசாரணையிலும் நான் ஆஜரானேன் என்றால் சரிதான் . அந்த விசாரணையில் எனது தரப்பு வாக்குமூலத்தை எழுத்து வடிவில் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரிதான் . என்னிடம் காட்டப்படும் ஆவணம் JDHS அவர்களுக்கு இந்த வழக்கு சம்பவம் தொடர்பாக எழுதி கொடுத்த கடிதம் என்றால் சரிதான். அந்த கடிதத்தின் நகல் **Ex.D1.** ஆகும். நான் JDHS க்கு அனுப்பிய கடிதத்தில் 2.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்தததாகவும், அதனை மருத்துவமனை நிர்வாக ம் ஊழல் செய்துவிட்டதாக பண்ணைக்காடு வாட்ஸ்அப் குழுவில் எதிரி தகவல் பரப்பியுள்ளதாக விபரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். மருத்துவமனை தகவல் பலகையினையும் படம் பிடித்து அதன் விபரத்தினை வாட்ஸ்அப் குழுவில் பதிவிற்றுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் . வாட்ஸ்அப் குழுவில் தகவல் பதிவிட்ட விபரம் தொடர்பாக ஊர்பொதுமக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளை அழைத்து நான் பேசினேன் என்றால் சரிதான். மேற்சொன்ன விபரங்களை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். வாட்ஸ்அப் குழுவில் எதிரி தகவல் பதிவிட்ட சம்பவமானது இவ்வழக்கு சம்பவத்திற்கு முன்பு நடந்த விபரங்கள் என்றால் சரிதான் . எதிரி வாட்ஸ்அப்பில் பதிவிட்ட உள்நோயாளி, புறநோயாளிகள் எண்ணிக்கை கொண்ட புகைப்படத்தில் உள்நோயாளிகள் பிரிவில் ஆண்கள் 12, பெண்கள் 12 என்று இருந்தது என்றால் , எண்ணிக்கை விபரங்கள் தற்போது நினைவில்லை . என்னிடம் காட்டப்படும் தகவல் பலகை விபரம் அடங்கிய புகைப்படம் தான் எதிரி வாட்ஸ்அப் குழுவில் பதிவிட்ட புகைப்படம் என்றால் சரிதான் . அந்த புகைப்படமானது சம்பவ தேதியில் எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் . அந்த புகைப்படம் ( A4 தாளில் அச்சிடப்பட்டது). அந்த புகைப்படம் **Ex.D2.** ஆகும், என்னிடம் காட்டப்படும் புகைப்படமானது பண்ணைக்காடு அரசு

மருத்துவமனை உள்நோயாளிகள் பிரிவின் புகைப்படம் என்றால் சரிதான். இந்த புகைப்படத்தினையும் எதிரி வாட்ஸ்அப் குழுவில் பதிவிட்டார் என்றால் சரிதான் .அந்த புகைப்படம் ( A4 தாளில் அச்சிடப்பட்டது). அந்த புகைப்படம் **Ex.D3** ஆகும். அந்த Ex.D3 ஆவணத்தில் இரண்டு நபர்கள்தான் உள்நோயாளிகள் பிரிவில் உள்ளார்கள் என்றால் சரிதான் . உள்நோயாளிகள் பிரிவில் நோயாளிகள் குறைவாக உள்ள சமயத்தில் உள்நோயாளிகள் அதிக எண்ணிக்கையில் இருப்பதுபோன்று தவறான தகவலை தகவல் பலகையில் குறிப்பேற்றம் செய்து அதற்கு ஈடான மருந்துகளை முறையற்ற விதத்தில் எடுத்து மருத்துவ நிர்வாகம் பயன்படுத்தியது என்றாலும், அதனை எதிரி புகைப்படம் எடுத்து வாட்ஸ்அப் குழுவிலும் , பொதுமக்களிடமும் உண்மை நிலவரத்தை கொண்டு சேர்த்ததால் அவர்மீது கால்புணர்ச்சி கொண்டு மருத்துவ நிர்வாகம் உத்தரவின்பேரில் நான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல . சம்பவ தினத்தன்று எதிரியும், புறநோயாளியாக சிகிச்சைக்கு வந்தார் என்றாலும், அந்த விபரத்தினை போலீசார் விசாரணையில் சொல்லாமல் மறைத்துள்ளோம் என்றால் சரியல்ல . எதிரி நான் சொன்னதுபோன்று எந்த குற்ற சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றாலும், எதிரி பழிவாங்க வேண்டும் நோக்கில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN — Digitally signed by R ARUN PANDIAN, Date: 2025.07.21 17:53:38 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**
**கொடைக்கானல்.**
**C.C.No.12 /2024**
**வழக்கு சாட்சி PW.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **ஜெயராணி** | தொழில் | : செவிலியர் |
| தகப்பனார் பெயர் | : ----- | கணவர் பெயர் | : தெய்வராஜ் |
| கிராமம் | : பண்ணைக்காடு | இனம் | : பெண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 46/2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 21.07.2025 |

**( எதிரி ஆஜரில் உள்ளார்)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது பண்ணைக்காடு அரசு மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிந்து வருகிறேன் . கடந்த எட்டு வருடங்களாக மேற்சொன்ன மருத்துவமனையில் நான் செவிலியராக உள்ளேன். கடந்த 07.07.2023 ம் தேதி மாலை 05.20 மணியளவில் மருத்துவர் ஆனந்தபசவன் , செவிலியரான தமிழரசி மற்றும் நான் பணியில் இருந்தபோது , மருத்துவர் உள்நோயாளி பிரிவினை கவனித்து வந்த சமயத்தில் ஆஜர் எதிரி கோபிஸ்வரன் உள்நோயாளி பிரிவிற்குள் வந்து உள்நோயாளிகள் பற்றிய விபரம் மற்றும் அவர்களுக்கு என்ன சிகிச்சை அளிக்கப்படுகிறது என்ற விபரத்தை கேட்டார். அதற்கு மருத்துவர் ஆனந்தபசவன் எதிரியிடம் பொதுவான நபர்களுக்கு நோயாளிகளின் விபரத்தை தெரிவிக்க கூடாதென்றும் , தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் கேட்டு தெரிந்து கொள்ளுமாறு பதில் கூறினார் . அப்போது எதிரி மருத்துவர் ஆனந்தபசவனைப்பார்த்து ஏய் பிச்சைக்கார நாயே தகவல் கேட்டால் சொல்லமாட்டாயா என்று சொல்லி உன்னை பார்க்கும்

விதத்தில் பார்த்துக்கொள்கிறேன் என்று சத்தம் போட்டார் . அப்போது அவரது செல்போன் மூலம் உள்நோயாளிகள் சிகிச்சை பிரிவில் இருந்த உள்நோயாளிகளையும், அங்கு உள்நோயாளிகள் பிரிவில் வைக்கப்பட்டிருந்த தகவல் பலகையில் உள்ள விபரத்தையும் செல்போனில் படம் பிடித்துக்கொண்டார் . மேற்சொன்ன விபரத்தை மருத்துவர் ஆனந்தபசவன், மருத்துவர் செல்வக்குமாருக்கு போன் மூலம் தகவல் கொடுத்தார். மருத்துவர் செல்வக்குமார் மேற்சொன்ன சம்பவம் தொடர்பாக தாண்டிக்குடி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் . மேற்சொன்ன சம்பவம் தொடர்பாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

சம்பவ சமயத்தின்போது உள்நோயாளி பிரிவில் நான்கு உள்நோயாளிகள் சிகிச்சையில் இருந்தார்கள் . சம்பவம் நடந்து ஒருவருடம் ஆகிவிட்டதால் உள்நோயாளியாக யார் யார் இருந்தார்கள் என்ற பெயர் விபரம் தற்போது எனக்கு நினைவில்லை. மருத்துவமனை பணிக்கு வரும்போது நான் வருகை பதிவேட்டில் வருகை பதிவேடு செய்வேன் என்றால் சரிதான், பயோமெட்ரிக்கிலும் கையொப்பம் செய்துள்ளேன் . மேற்சொன்ன வருகை பதிவேடை பார்வையிட்டால் சம்பவ தினத்தன்று யார் யார் பணியில் இருந்தார்கள் என்ற விபரம் தெளிவாக தெரியும் என்றால் சரிதான் . வருகை பதிவேடினை போலீசார் விசாரணை நிமித்தமாக எடுத்துக்கொண்டார்கள் என்றால் எடுத்துக்கொண்டார்கள் . 12.07.2023ம் தேதி பண்ணைக்காடு அரசு மருத்துவமனையில் வைத்து போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் . விசாரணைக்கு வந்த போலீசார் உள்நோயாளி பிரிவில் இருந்த உள்நோயாளிகளை விசாரணை செய்தார்களா என்றால் , அதுகுறித்த விபரம் எனக்கு தெரியாது. நான் சம்பவ தேதியன்று மருத்துவ பணியில் இல்லையென்றாலும், இந்த வழக்கின் புகார்தாரர் எனது மேலதிகாரியான மருத்துவர் என்பதால் நான் பணியில் இல்லாமல் பணியில் இருந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புறநோயாளிகள் பிரிவில் உள்ள பகுதியில்

இருந்து உள்நோயாளிகள் பிரிவில் யார் யார் உள்ளார்கள் என்று பார்க்க முடியுமா என்றால் பார்க்கமுடியும். எதிரி உள்நோயாளிகள் பிரிவில் அத்துமீறி நுழையவில்லை என்றாலும் , எந்த காலகட்டத்திலும் எனது பணிக்கு இடையூறு ஏற்படும் விதமாக செயல்படவில்லை என்றாலும் , வழக்கிற்காக நான் அவ்வாறு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . அவசர உதவி எண்ணாண 100–க்கு போன் செய்தால் போலீசார் வருவார்கள் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான் . நான் அவசர உதவி எண்ணாண 100–க்கு போன் செய்தேனா என்றால் இல்லை. நான் சொன்னதுபோன்ற எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN
Digitally signed by R ARUN PANDIAN
Date: 2025.07.21 17:53:46 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.